**தமிழ் நாடு அரசு**

சுருக்கம்

நிறுவனம் - தலைமைச் செயலகப் பணி - உதவியாளர் பதவிக்கு ஒதுக்கப்பட்ட பதவிகளில் மோட்டார் சைக்கிள் தூதுவர் பதவியினையும் சேர்த்தல் - ஆணை வெளியிடல்.

---

பணியாளர் மற்.றும் நிர்வாக சீர்திருத்த (யு) துறை,

அரசு ஆணை (நிலை) எண்.51 நாள் 13.03.2001

படிக்கப்பட்டது

1. அரசு ஆணை நிலை எண். 67, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (டி) துறை, நாள் 27.3.98.

2. தலைமைச் செயலக ஊர்தி ஓட்டுநர் சங்க கடித நாள் 18.7.2000.

3. தேர்வாணையக் கடித எண்.7494/ஆர்.என்.டி-டி2/2000, நாள் 5.2.2001.

*****

ஆணை.

தலைமைச் செயலக சிறப்பு விதி 5ன் படி, தலைமைச் செயலக உதவியாளர் பதவிக்கு 20% காலியிடங்கள், தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் கீழ்காணும் நபர்களைக் கொண்டு பதவி உயர்வு மூலம் நிரப்பப்படலாம்:-

1 ) தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் பட்டதாரி தட்டச்சர்கள் பட்டதாரி பதிவுரு எழுத்தர்கள், பட்டதாரி தொலைபேசி இயக்குபவர்கள் மற்றும் பட்டதாரி ஊர்தி ஓட்டுநர்கள் - 10%

2) தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் பட்டதாரி அல்லாத தட்டச்சர்கள் மற்றும் பதிவுரு எழுத்தர்கள் - 5%

3) தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் பட்டதாரி அலுவலக உதவியாளர்கள் மற்றும் பட்டதாரி வாகனம் சுத்தம் செய்பவர்கள் - 5%

2. தமிழ் நாடு தலைமைச் செயலக ஊர்தி ஓட்டுநர் சங்கம், தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் பட்டதாரி மோட்டார் சைக்கிள் தூதுவர்களை தலைமைச் செயலக உதவியாளர் பதவிக்கான ஊட்டுப் பணியிடங்களில் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ள கோரியுள்ளது.

3. தலைமைச் செயலக சிறப்பு விதி 5ன்படி, தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் பட்டதாரி தட்டச்சர், பட்டதாரி பதிவுரு எழுத்தர், பட்டதாரி தொலைபேசி இயக்குபவர் மற்றும் பட்டதாரி வாகன ஓட்டுநர் ஆகியோருக்கு, உதவியாளர் பதவிக்கான காலியிடங்களில் 10% ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய இனங்களுடன் தமிழ் நாடு தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் பட்டதாரி மோட்டார் சைக்கிள் தூதுவர்களையும் சேர்ப்பது குறித்து விரிவாக பரிசீலிக்கப்பட்டது. இதற்கு தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தன் இசைவினை வழங்கியுள்ளது.

4. தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் பட்டதாரி அலுவலக உதவியாளர், பட்டதாரி வேன் துப்புரவாளர், பட்டதாரி மற்றும் பட்டதாரி அல்லாத பதிவுரு எழுத்தர், தட்டச்சர் மற்றும் பட்டதாரி ஊர்தி ஓட்டுநர் ஆகிய பதவியில் உள்ள நபர்கள் தலைமைச் செயலகத்தில் உதவியாளராக பதவி உயர்வுக்கு ஏற்கனவே சேர்க்கப்பட்டுள்ளனர். அதன் அடிப்படையில் பட்டதாரி மோட்டார் சைக்கிள் தூதுவர்களின் கோரிக்கையும் ஏற்புடையதாகிறது.

5. எனவே, மேற்கூறிய பட்டதாரி மோட்டார் சைக்கிள் தூதுவர்களை மேலே பத்தி 1ல் குழு (1)ல் குறிப்பிடப்பட்டுள்ள 4 இனங்களுடன் ஐந்தாவது இனமாக சேர்த்து ஆணையிடப்படுகிறது.

6. தலைமைச் செயலகச் சிறப்பு விதிகளுக்கு இது குறித்த தக்க விதி திருத்தங்கள் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (டி) துறையால் தனியே வெளியிடப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு.மெய்கண்ட தேவன்,

செயலாளர்.

பெறுநர்

1.. அனைத்து தலைமை செயலகத் துறைகள்,
2. செயலர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.

நகல்

தனிச்செயலர், முதலமைச்சர் அலுவலகம்,
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (டி) துறை
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறையின்அனைத்து பிரிவுகளுக்கும்,
தலைவர், தமிழ் நாடு தலைமைச் செயலக ஊர்தி ஓட்டுநர்கள் சங்கம், சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

ஓம்/-
பிரிவு அலுவலர்.